DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | : | **S.C.No.745/2017** |
| Depositions of Witness for | : | Prosecution Pw 12 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.இசக்கி துரை |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2024.

(A1 to A5 present.)

<u>**முதல் விசாரணை**</u>

நான் அச்சன்புதூரில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் எதிரி சாமித்துரை மற்றும் முத்துராஜ் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 18.08.2015 ஆம் தேதி காலை 05.00 – 05.30 மணியளவில் நானும் எனது மைத்துனர் குமார் என்பவரும் குளிப்பதற்காக மேக்கரை டேமிற்கு சென்றோம். அப்போது மேக்கரை டேம் போகும் வழியில் அன்பு இல்லம் அருகே, போலீசார் எங்களை வழிமறித்து நிறுத்தினார்கள். எங்கே போகிறீர்கள் என்று எங்களை கேட்டபோது,

டேமிற்கு குளிக்கசெல்லும் தகவலை சொன்னோம். அச்சன்புதூரில் நடந்த கொலை பற்றி தெரியுமா என்று போலீசார் கேட்டபோது, அதுபற்றி நான் கேள்விப்பட்டேன் என்று சொன்னேன். அப்போது வடக்கிலிருந்து தெற்குநோக்கி ஒரு காரில் சாமித்துரையும், முத்துராஜீம் வந்தார்கள். அதே இடத்தில் போலீசார் அவர்களையும் மறித்து விசாரித்தார்கள். ஆய்வாளர் அவர்களை விசாரிக்க சாமித்துரை என்பவர் சண்டியர் (எ) ராஜகோபாலை நான் தான் வெட்டினேன் என்றும், கீழ நத்தம் பக்கம் தலையையும் முண்டத்தையும் எரித்து போட்டேன் என்று சொன்னார். அதை ஆய்வாளர் எழுதிக்கொண்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் குமாரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். நாங்கள் கையெழுத்துபோட்ட அந்த ஒப்புதல் வாக்குமூலம் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ. 4** ஆகும். அந்த இடத்தில் வைத்து காரையும், அதிலிருந்த அரிவாளையும் ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அதில் நானும் குமாரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ.5** ஆகும். அது ஒரு வெள்ளை நிற மகேந்திரா லோகன் கார் ஆகும். பதிவெண் நியாபகமில்லை. அதன்பிறகு அங்கிருந்து அச்சன்புதூர் சங்கரவடிவு என்பவரின் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து 3 இருசக்கர வாகனங்களை போலீசார் கைப்பற்றினார்கள். 2 வண்டி கருப்பு நிறம், 1 வண்டி நீல நிற வாகனமாகும். என்ன வாகனம் என்பது தற்போது எனக்கு நினைவில்லை. அந்த வாகனங்களையும் ஆய்வாளர் ஒரு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அதில் நானும் குமாரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ.6** ஆகும். அந்த இடத்தில் வைத்தே என்னை விசாரித்துவிட்டு அனுப்பிவிட்டார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இறந்துபோன சண்டியர் (எ) ராஜகோபால் எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு உறவினர் தான், எனக்கும் அவருக்கும் ஒரே ஊர். என்னுடன் வந்த குமார் எனக்கு உறவினர் தான். போலீசார் என்னை நிறுத்திய இடத்திற்கும் எங்கள் ஊருக்கும் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். அன்றைய தினம் நாங்கள் வாகனத்தை கழுவி பின்னர் நாங்கள் குளிக்கவேண்டும் என்பதற்காக சென்றோம். போலீசார் எங்களை சந்தேகப்பட்டு நிறுத்தி விசாரித்தார்கள். அந்த இடத்தில் போலீஸ் ஜீப்பும் சாமித்துரை

வந்த காரும் தான் இருந்தது. நாங்கள் செல்வதற்கு முன்பே எதிரிகளை அங்கே நிறுத்தி வைத்திருந்தார்கள். போலீசார் நாங்கள் செல்வதற்கு முன்பே வாக்குமூலம் எழுதிவிட்டார்களா என்றால் இல்லை, நாங்கள் இருக்கும்போது தான் போலீசார் எழுதினார்கள். நான் நீதிமன்ற முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தவிர வேறு விவரங்களையும் போலீசார் எழுதிக்கொண்டார்கள். அந்த விவரங்கள் என்ன என்பதை தற்போது என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான்.

இறந்துபோன சண்டியர் (எ) ராஜகோபால் எவ்வளவு உயரம் இருப்பார் என்றால் சுமார் 5.5 அடி உயரம் இருப்பார். முதலில் நாங்கள் இறந்துபோன சண்டியர் (எ) ராஜகோபால் வீடு அருகே இருந்தோம், அதன்பிறகு நாங்கள் நெடுவயல் என்ற ஊருக்கு மாறி சென்றுவிட்டோம். அன்றைய தினம் நாங்கள் எத்தனை கையெழுத்து போட்டோம் என்றால் 2 கையெழுத்துக்களை மேக்கரையில் வைத்து போட்டேன், 1 கையெழுத்தை அச்சன்புதூரில் வைத்து போட்டேன். அச்சன்புதூரில் மெயின் ரோட்டில் சங்கரவடிவின் வீடு உள்ளது. அங்கு கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனங்கள் யாருக்கு சொந்தமானது என்று ஆர்.சி. புத்தகத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சென்று பார்க்கும்போது, இருசக்கர வாகனங்கள் திறந்தவெளியில் தான் இருந்தது. எதிரிகள் வந்த காரை ரோட்டில் வைத்து தான் கைப்பற்றினார்கள். காரை முத்துராஜ் என்பவர் தான் ஓட்டிவந்தார். காரின் ஆர்.சி. புத்தகம் யார் பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் தான் கைப்பட எழுதினார். அதை எழுதி முடிக்க சுமார் 1 மணி நேரம் ஆனது என்றால் இருக்கும். என்னிடமோ குமாரிடமோ பக்கத்திற்கு பக்கம் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். நான் அச்சன்புதூர் காவல்நிலையத்தில் கையிறுப்பு சாட்சி என்றும், வெற்று பேப்பரில் என்னிடம் கையெழுத்து பெற்று அதன் பிறகு ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

அரிவாளை காரில் இருந்து ஆய்வாளரோ வேறு யாருமோ வெளியே எடுக்கவில்லை, காருக்குள் இருந்ததை பார்த்தோம். நான் சொன்னதுபோல் நானும் குமாரும், இருசக்கர வாகனத்தில் மேக்கரைக்கு சென்றதாகவும், அங்கு சாமித்துரையும் முத்துராஜீம் காரில் வந்ததாகவும், போலீசார்மறித்தபோது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, நான்

முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் சொன்னேன், வேறு எதுவும் சொல்லவில்லை. தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

S MANOJKUMAR Digitally signed by S MANOJKUMAR

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | : | **S.C.No. 745/2017** |
| Depositions of Witness for | : | Prosecution Pw 13<br>Defence<br>Court |
| Name | : | திரு.செந்தில் குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2024.

(A1 to A5 present.)

**முதல் விசாரணை**

நான் அச்சன்புதூரில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. சண்டியர் (எ) ராஜகோபால் என்பவர் கொலை செய்யப்பட்டார் என்று நான் கேள்விப்பட்டேன். மற்ற படி வழக்கு விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஐயப்பன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.7** ஆகும். 7 – 8

வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அச்சன்புதூர் காவல்நிலையத்திற்கு என்னை வரசொன்னார்கள். அப்போது போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் மேற்படி கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். அதில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் தற்போது எனக்கு நியாபகமில்லை. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 24.08.2012 இரவு 07.30 மணிக்கு நானும் எங்கள் ஊரை சேர்ந்த சக்திவேலும் அச்சன்புதூர் காவல்நிலையம் முன்பு பேசிக்கொண்டிருந்தபோது, அச்சன்புதூர் காவல் ஆய்வாளர் ஒரு கொலை வழக்கு சம்பந்தப்பட்டு ஐயப்பன் என்பவரை பிடித்து விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும் சக்திவேலும் சாட்சியாக கையெழுத்து போட்டோம் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக இவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | : | **S.C.No. 745/2017** |
| Depositions of Witness for | : | Prosecution Pw 14<br>Defence<br>Court |
| Name | : | திரு.சக்திவேல் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2024.

(A1 to A5 present.)

**முதல் விசாரணை**

நான் அச்சன்புதூரில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 24.08.2015 ஆம் தேதி மாலை 07.30 மணியளவில் நானும் செந்தில் குமார் என்பவரும் அச்சன்புதூர் காவல்நிலையம் அருகே உள்ள டீக்கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அச்சன்புதூர் காவல் ஆய்வாளர் ஒரு கொலை வழக்கு தொடர்பாக ஒரு நபரை பிடித்துவைத்திருக்கிறோம் என்றும், அதற்கு சாட்சியாக கையெழுத்து போட வாருங்கள் என்று எங்களை அழைத்ததின் பேரில்

நானும் செந்தில் குமாரும், அச்சன்புதூர் காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கே ஆஜர் எதிரி ஐயப்பனை போலீசார் பிடித்துவைத்திருந்தார்கள். போலீசார் விசாரித்தபோது, எதிரி ஐயப்பன் சண்டியர் (எ) ராஜகோபாலை நாங்கள் தான் கழுத்தை அறுத்து கொலை செய்தோம் என்று சொன்னார். அதை போலீசார் தட்டச்சு செய்துகொண்டார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் செந்தில் குமார் முதல் சாட்சியாகவும், நான் இரண்டாவது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த ஒப்புதல் வாக்குமூலம் தான் என்னிடம் காட்டப்படுவது. எதிரி ஐயப்பனும் அதில் கையொப்பம் செய்திருந்தார். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ.8** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன சண்டியர் (எ) ராஜகோபால் எனது உறவினர் என்றால் சரிதான். சண்டியர் (எ) ராஜகோபால் இறந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னை அழைத்தார்கள் என்றால் 2 வாரங்கள் கழித்து அழைத்தார்கள். டீக்கடையில் டீ குடித்துக்கொண்டிருந்தபோது, போலீசார் அழைத்ததின் பேரில் சென்றோம். நான் செல்வதற்கு முன்பே போலீசார் ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்து வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல, நான் உள்ளே சென்ற பிறகு தான் அதை தயார் செய்தார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை முழுவதும் தட்டச்சு செய்வதற்கு சுமார் 1 மணி நேரம் ஆகியிருக்குமா என்றால் இருக்கும். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விவரங்களையும் என்னால் தற்போது சொல்ல இயலாது என்றால் சரிதான். எனது ஆட்டோ ஸ்டாண்டிற்கும் காவல்நிலையத்திற்கும் அரை கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அச்சன்புதூர் காவல்நிலைய வழக்குகளில் நான் சாட்சி சொல்வது வழக்கம் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில் போலீசார் எங்களை அழைத்ததாக சொல்வதும், நான் காவல்நிலையம் சென்றபோது அங்கு எதிரி இருந்ததாக சொல்வதும் அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று சொல்வதும், அதனை போலீசார் தட்டச்சு செய்ததாக சொல்வதும், அதை நானும் செந்தில் குமாரும் பார்த்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. எழுதப்படாத பேப்பரில் என்னிடமும் செந்தில்குமாரிடமும் கையொப்பம் பெறப்பட்டு பின்னிட்டு வாக்குமூலம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR
Digitally signed by S MANOJKUMAR